1977 ஜூலை 8]

(i) திரு. வி. ஆர். அரங்கநாதன், முன்னாள் மேலவை உறுப்பினர்.

(ii) திரு. கே. வி. சுப்பையா, முன்னாள் அமைச்சர்

(iii) திரு. எஸ். நடராசன், முன்னாள் மேலவை உறுப்பினர் ஆகியோர் மறைவு குறித்து.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்.—மாண்புமிகு உறுப்பினர்களே, சென்ற கூட்டத் தொடர் முடிவுற்ற பிறகு 1976-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 2-ம் நாள் திரு வி. ஆர். அரங்கநாதன், முன்னாள் மேலவை உறுப்பினர் அவர்கள், 1976-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 30-ம் நாள் திரு கே. வி. சுப்பையா, முன்னாள் அமைச்சர் அவர்கள், 1977-ம் ஆண்டு மே மாதம் 10-ம் நாள் திரு எஸ். நடராசன், முன்னாள் மேலவை உறுப்பினர் அவர்கள், இயற்கை எய்தினர் என்ற செய்தியை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு வி. ஆர். அரங்கநாதன் 1952 முதல் 1958 வரை ஆசிரியர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு இம் மன்றத்தில் உறுப்பினராக இருந்தார்.

திரு கே. வி. சுப்பையா 1967 முதல் 1976 வரை தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினராகவும் 1969 பிப்ரவரி முதல் 1971 ஜனவரி வரை அறநிலைய அமைச்சராகவும் பொறுப் பேற்று நல்ல பல பணிகளை ஆற்றியவர்.

திரு எஸ். நடராசன் 1959 முதல் 1962 வரை ஆசிரியர்கள் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு உறுப்பினராக இருந்தார். கல்வி நிறுவனங்கள் பலவற்றில் சிறப்பான பணிகள் பல புரிந்தார்.

அவர்களது மறைவால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் உறுப்பினர்கள் இரண்டு நிமிடம் மவுனமாக எழுந்து நிற்குமாறு வேண்டுகிறேன்.

அவையினர் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நின்றனர்.